Registered as a Newspaper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தேசிய தினசரி

போன் 389

மலர் 13 இதழ் 297

யாழ்ப்பாணம் கார்த்திகை 22 ஆவ்வாக் 19 புதன்கிழமை (8-12-71)

விற்பனையாகிறது

நத்தார்,
புது வருட வாழ்த்துக்கள்

கண்ணைக்கவரும் பல கலர்
ஏராளமான டிசைன்களில்
விற்பனையாகிறது
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் கிடைக்கும்.
தயாரிப்பும் விற்பனையாளரும்

தமிழ்ப்பண்ணைபுத்தகநிலையம்
193, கே. கே. எஸ். வீதி,
19, பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.

# பாக். சென்ற 6 கப்பல்களை இந்தியர் கைப்பற்றினர்

## சிந்து பகுதியில் 7 நகரங்கள் வீழ்ச்சி

புதுடில்லி, டிச. 7

கிழக்குப்பாகிஸ்தானின் முக்கிய விமானத்தளங்களில் ஒன்றான ஜெசூர் விமானத்தளம் இந்தியப் படைகளிடம் வீழ்ச்சியுற்றிருப்பதாகக் கடைசியாகக்கிடைத்த செய்தியொன்று கூறுகின்றது.

## காஷ்மீரில் கடும் சண்டை நீடிக்கிறது

## ஜெசூர் வீழ்ச்சி: கொமில்லா துண்டிப்பு

ஜெசூர் ராணுவ பாதுகாப்பு முஸ்திபுகள் யாவற்றையும் முறித்துக்கொண்டு இந்திய படைகள் விமானத்தளத்தை முற்றுகையிட்டனவாம்.

மேற்கு அரங்கில் பல இடங்களில் நேற்று மீண்டும் பாகிஸ்தான் போர் விமானங்கள் இந்திய நிலைக்குள் பறந்து குண்டு வீசின. சண்டிகார் நகரின் மேலாகவும் பாகிஸ்தான் விமானங்கள் பறந்ததாகக் கூறப்பட்டது.

பாகிஸ்தானுக்கு சரக்கு கொண்டுபோய்க்கொண்டிருந்த 6 வர்த்தகக் கப்பல்களை இந்திய கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஐ. நா. சிப்பந்திகளை ஏற்றிச்செல்வதற்காக டாக்காவுக்கு சென்ற ஜெட் விமானம் இன்று டாக்காவுக்கு மேலே பறக்கும்போது சேதப்படுத்தப்பட்டது. அந்த விமானம் இப்பொழுது ரங்கூனுக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

மேற்கு அரங்கில் பாகிஸ்தான் படைகளுக்கு சாமான்கள் கொண்டுசென்ற சரக்கு ரயில்வண்டியொன்றை இந்திய விமானங்கள் குண்டுவீசித் தகர்த்துவிட்டதாக அறிவித்துள்ளன.

ஜெசூர் நகரிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஜெசூர் விமானத் திடல்மீது கடும் தாக்குதல்களை இந்திய படைகள் நடத்தினார்கள். ஜெசூர் ராணுவ கன்டோன்மன்டின் மைத்த பாதுகாப்பு அரண்களை துவம்சம் செய்தபின் விமானத்தளத்தை இந்திய படைகள் வளைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இங்கு பொது மக்களுக்கு அதிக சேதம் விளைவிக்காமல் அமைந்திருந்த பாகிஸ்தான் படைகளை அகற்றும்படி இந்திய ராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கொமில்லா பகுதி முற்றுகைத் துண்டிப்பு

கொமில்லா நகரை இந்திய படைகள் முற்றுகையிட்டு எல்லா தொடர்புகளிலிருந்தும் துண்டித்து விட்டதாக இந்திய ராணுவத் தளபதி ஒருவர் கூறினார். இந்த நகரை இப்பொழுது இந்திய படைகள் முற்றுகையிட்டுள்ளார்களாம். லால்முனிர்காட் விமானத்தளத்தையும் கைப்பற்றி விட்டதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## சில்ஹட்டும் வீழ்ச்சி

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சில்ஹட் நகரும் இந்தியப் படையிடம் வீழ்ந்துள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது. இந்தியப் படைகள் ஹெலிகாப்டர்கள் மூலம் சில்ஹட் நகரில் இறங்கியதாகவும் அந்நகர் இப்பொழுது இந்தியப் படையின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை - பாக் தபால்சேவை தற்காலிக நிறுத்தம்

கொழும்பு, செவ்.

இலங்கைக்கூடாகவும் இலங்கையிலிருந்தும் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் சகல பார்சல்களையும் கடிதங்களையும் அனுப்புவதை தபால்பகுதி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இலங்கையிலிருந்து தபால்களையும் பார்சல்களையும் பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டாமென பொதுமக்களுக்கு தபால் சேவைப்பகுதி அறிவித்துள்ளது.

## வங்காளதேஷ்: பூட்டான் அங்கீகாரம்

பங்களாதேஷ் அரசை பூட்டான் அங்கீகரித்துள்ளது. இச் செய்தியை பங்களாதேஷ் தலைவர்களுக்கு பூட்டான் மன்னர் தெரிவித்துள்ளார். மன்னர் தனது செய்தியில் பங்களாதேஷ் மக்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றியடைவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அரசு அமைக்க

## பூட்டோ, அமீன் ஆகியோருக்கு அழைப்பு

ராவல்பிண்டி, டிச. 7

பாகிஸ்தானில் கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவுமாறு ஐக்கிய கட்சித் தலைவர் திரு. நூருல் அமீனையும் பாகிஸ்தான் ஜனநாயகக் கட்சித் தலைவர் திரு. சுல்பிகார் அலி பூட்டோவையும், பாகிஸ்தான் ஜனாதிபதி [illegible] [illegible] ராவல்பிண்டியிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

திரு. அமீன் பிரதம மந்திரியாகவும், திரு. பூட்டோ உதவிப் பிரதமராகவும் வெளியுறவு அமைச்சராகவும் இருப்பார்களெனத் தெரிகிறது.

திரு. பூட்டோவின் மக்கள் கட்சி கடந்த தேர்தலில் மேற்குப் பாகிஸ்தானில் பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்ததோடு அவாமி லீக்கிற்குப் அடுத்த பெரும்பான்மைக் கட்சியாக இருந்தது. ஆனால் கிழக்குப் பாகிஸ்தானில் அவாமிலீக்குடன் போட்டியிட்டு 169 தொகுதிகளில் 2 மட்டுமே பாகிஸ்தான் ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3790

உழுத்தம்பருப்பு வியாபாரத்தில் அதிக இலாபம் அடைய குறைந்த கூலியில் உழுந்து உடைத்துக்கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
முகமதி கிரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3754

### வைத்தியம்

வாதம், இரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றுகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்தியசாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

## விற்பனைக்கு

கேசரோக நிவாரண தைலம் உயர்தர மூலிகைகளால் சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. தலைமயிர் கொட்டுதல், புழுவெட்டு, இளநரை சொடுகு முதலிய கேச ரோகங்களுக்குச் சிறந்த நிவாரணி எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம். 3789

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, துரையப்பா ஒழுங்கையிலுள்ள மூன்று பரப்புக் காணியும், சகல வசதிகளும் கொண்ட புதிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு K.D. இராஜசேகரம், 12/4 கஸ்தூரியார் வீதி, அரியாலை யாழ்ப்பாணம். 3795

நாவற்குழி - வீடுகட்டுவதற்கேற்ற நாலு பரப்பு விஸ்தீரணமான ஐந்து காணிகள். நல்ல தண்ணீர். மின்சாரம், போக்குவரத்து வசதிகள் உள. பெரியகடையிலிருந்து ஐஸ் கலி இருபத்தைந்து சதம். ஏற்கனவே முப்பது காணிகள் விற்பனையாகிவிட்டன. நேரில் மனுச்செய்க, லாண்ட் இன்வெஸ்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453 3793

## விற்பனைக்கு

காணி!
43, கண்டி வீதியிலுள்ள 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. V. K. இராசரத்தினம், 95, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3796

### தேவை

வழக்கறிஞர் ஒருவருக்கு, யாழ் மாநகர எல்லைக்குள் வசிக்கும் ஆங்கிலத்தில் தட்டச்சுத் தெரிந்த திறமையுள்ள லிகிதர் தேவை. ஆங்கில அறிவு முக்கியம். விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 3797 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 3797

## கேள்வி விளம்பரம்

### கிராமசபை அலுவலகக் கட்டிட வேலைகள்

மேற்குறித்த வேலைக்காக சில் வைக்கப்பட்ட கேள்விகள் அராலிக் கிராமசபைத் தலைவரால், 20-12-71-ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 9-00 மணிவரையும் ஒப்பந்தகாரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 18-12-71-ந் திகதி மு. ப. 11-30 மணி வரையும், ரூபா 25/- ரெண்டர்ப்பணமாகவும், ரூபா 15/- ரெண்டர்ப் பத்திரப் பணமாகவும் செலுத்து பதன் பேரில் வழங்கப்படும். ஏனைய விபரங்களை அலுவலகத்தில் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

இ. நாகலிங்கம்
தலைவர்,
அராலிக் கிராமசபை.
கிராமசபை அலுவலகம்,
அராலி, 3-12-1971. 2692

## உரும்பராய்-ஊரெழு பட்டினசபை

### பொதுச்சந்தைக் குத்தகை 1972 ஏல விற்பனை 20—12—71 காலை 10 மணி

இச்சபை எல்லைக்குள் அடங்கும் உரும்பராய் சந்தியில் உள்ள சந்தையை 1972-ம் ஆண்டு (1-1-1972-31-12-72) காலத்திற்கான குத்தகை பகிரங்க ஏலத்தில் 20-12-71 காலை 10 மணிக்கு சந்தை வளவில் விற்கப்படும். ஏலத்தில் கூடிய தொகைக்கு கேள்வி கேட்டு குத்தகைத் தொகையை எடுப்பவர் குத்தகைத் தொகையில் 1/4 பங்கைப் பிணைப்பணமாக உடனே செலுத்த வேண்டும். மிகுதி மூன்று பங்குகளும் ஒவ்வொரு காலாண்டுக்குமாக முறையே 31-3-72; 30-6-72; 30-9-72-க்கு முன்னர் செலுத்த வேண்டும்.

இதற்கு முன்னர் சந்தைக் குத்தகைக்கு எடுத்து குத்தகைப்பணத்தை ஒழுங்காக உரிய காலக்கெடுவில் செலுத்தத் தவறி நிலுவையில் விட்டு பின்னர் காலந்தாழ்த்தி அடுத்த வருடங்களில் செலுத்தியவர்களும் செலுத்தாதவர்களும் கேள்விகேட்க அருகதை அற்றவர்களெனக் கருதப்பட்டு அவர்கள் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ சபைக்கு அதிகாரமுண்டு. சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் குத்தகைக்காரர் 28-12-71க்கு ஓர் ஒப்பந்தம் தலைவருடன் செய்து கொள்ள வேண்டும். குத்தகைக்காரர் புறநோட்டர் மூலமான பிணையுறுதியும் 10-1-72க்கு முன் முடித்துத் தர வேண்டும்.

மற்றும் விபரங்கள் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. பத்மராசா
தலைவர்,
பட்டினசபை,
உரும்பராய்-ஊரெழு.
பட்டினசபை அலுவலகம்,
உரும்பராய்-ஊரெழு.
உரும்பராய்,
6-12-71. 2691

## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்வி அறிவித்தல்

### மின்சாரப் பொருட்கள் விநியோகம் 1972

1972-ம் ஆண்டில் மின்சாரப் பொருட்கள் விநியோகிப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 5-1-72-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மாநகரசபை அலுவலகத்தில் 29-12-71 பி. ப. 3-00 மணிவரை விண்ணப்பத்தின் மீது பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிற் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீளளிக்கப்படத்தக்க கேள்வி வைப்புப் பணமாகிய ரூபா 250/-ம் மீளளிக்கப்படமாட்டாத ஒவ்வொரு இணைக் கேள்விப் படிவங்களின் பெறுமதியான ரூபா 10/-ம் இவ் அலுவலகத்திற் செலுத்தப்படல்வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகரசபைக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
தங்களுண்மையுள்ள
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
6-12-1971. 2694

## இடமாற்றம்

வெள்ளவத்தை, செல். கொள்ளுப்பிட்டி தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் கடமையாற்றிய திரு த. சுந்தரலிங்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேசத் தந்திப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் கடமையாற்றிய திரு பாண்டியன் செல்லரத்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட தந்திப்பரிசோதகர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
நாகேஷ் - விஜயநிர்மலா
நடித்த
# பணமா? பாசமா?

---

யாழ். தியேட்டர் (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி - ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
## எங்கிருந்தோ வந்தாள்

---

2-வது வாரம்
வெல்லிசினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
எங்க வீட்டுப் பிள்ளை
[புதிய கொப்பி]

---

சாந்தி சினிமா (சங்கானை)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
பாமா விஜயம்

---

ஸ்ரீ கலிங்கன் (இணுவில்)
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி.ப. 2-30
ஜெமினி - கே. ஆர். விஜயா
மாஸ்டர் பிரபாகர்
நடித்த
ராமு

---

MANOHARA
(Jaffna)
Daily 4 shows
Giuliano Gemma
Nino Bengenuti
(Introducing heavy weight champi an - 1971
in
ALIVE OR PREFERABLY DEAD
(color)

---

REGAL Jaffna
Daily 2-30
5-00, 7-15 & 9-45p.m.
Jean Gabin
Alain Delon
in
THE SICILIAN CLAN
(Cinemascope - color)

---

RAJAH - Jaffna
Daily 10-30 a. m.
4-15, 7 & 9-45 p. m.
BANCO FOR A GOLD KILLER
(Eastman Color)

---

நாகம்ஸ் சினிமா (சுன்னாகம்)
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு 10-30
SIEGE OF THE SAXONS
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
நான் கண்ட சொர்க்கம்

---

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு: 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்



நடித்த
# என் அண்ணன்

---

லிடோ
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
வாணிஸ்ரீ
சாவித்திரி
அசோகன்
நாகேஷ்
சுந்தரராஜன்



நடித்த
# மனசாட்சி

---

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
☆ சிவாஜி ☆ சாவித்திரி ☆ நம்பியார்
நடித்த
# பிராப்தம்

---

# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit) வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.
2. ரூபா 500/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit) வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்.

குறிப்பு:- இந்த ஜூபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்.

மறுவிபரங்களுக்கு:
தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவுக்கு அளித்த பொருளாதார உதவியையும் அமெரிக்கா நிறுத்தியது!

## பஞ்சாப், காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் தொடர்ந்து முன்னேற்றம்

### சியால் கோட்டில் இந்தியா வெகுதூரம் ஊடுருவல்

நியூயோர்க், டிசம்பர் 7

**இந்தியாவுக்கு அமெரிக்கா அளித்துவந்த பொதுவான சகல பொருளாதார உதவிகளையும் நிறுத்திவிட்டது.**

**சுமார் 8கோடி 70 லட்சம் டாலர் அமெரிக்க உதவி இதனால் தடைபட்டுள்ளது.**

**இந்தியாவுக்கு இராணுவ ஆயுதங்கள் வழங்குவதையும் ஏற்கனவே அமெரிக்கா தடைசெய்துள்ளது தெரிந்ததே.**

**கிழக்குப்பாகிஸ்தான் நெருக்கடியில் சுமுகமான தீர்வு காண்பதற்கு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் எடுத்துவரும் நடவடிக்கைகளைத்தாம் ஆதரிப்பதாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் கூறியிருக்கிறார்.**

மேற்கு அரங்கில் பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் பாகிஸ்தான் தரைப் படைகள் இந்திய பகுதிக்குள் நுழைந்து பலஇடங்களை தம் வசப் படுத்திக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளன. நேற்று 10 இந்திய விமானங்கள்மீது குண்டுவீசியதாகவும் கச்பகுதியில் இந்திய சண்டைப்படகுகள் பலவற்றை மூழ்கடித்ததாகவும் அவர்கள் கூறினர்.

கிழக்குப்பாகிஸ்தானில் சண்டை நிலைமைபற்றி வந்துகொண்டிருக்கும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே காணப்படுகின்றன.

இந்தியப்படைகள் பெரும் வெற்றியடைந்துவருவதாகக் கூறுகிறார்கள். ஆனால் இன்னமும் பாகிஸ்தான் ராணுவம் கிழக்குப்பாகிஸ்தானை முற்றாக தனது ஆதிக்கத்தில் வைத்திருப்பதாக பாகிஸ்தானில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சண்டைவலுத்திருப்பதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு கொடுத்து வரும் பொதுவான பொருளாதார உதவிகள் அனைத்தையும் நிறுத்திவிட அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இத்தகவலை அமெரிக்க பொருளாதாரக் காரியதரிசி நியூயோர்க்கிலுள்ள இந்தியத் தூதரிடம் தெரிவித்தார். இந்த உதவி நிறுத்தம் காரணமாக இந்தியாவின் பெருமளவில் வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

இந்திய உபகண்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுமுகமான முயற்சிகள் மேற்கொள்ளும் அதிபர் யாஹ்யாக்கானின் நடவடிக்கைகளைத்தாம் ஆதரிப்பதாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் தெரிவித்தார். அமெரிக்காவில் பாகிஸ்தானின் புதிய தூதுவர் தமது நியமனப்பத்திரங்களை அதிபர் நிக்ஸனிடம் கையளித்தபோது அவர்மேற்கண்டவாறு கூறினார். அண்டை நாடொன்றுடன் இந்தியா சண்டைபோடத் தொடங்கியிருப்பது துரதிருஷ்டமானதாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கிழக்குப்பாகிஸ்தானில் தமது படைகள் பெரும் வெற்றிகளை அடைந்து வருவதாக இந்திய அதிகாரிகள் கூறியபோதிலும் ஒருசில பகுதிகளைத்தவிர மற்ற எல்லாப் பகுதியும் தமது ஆதிக்கத்திலேயே இருப்பதாக பாகிஸ்தான் கூறுகின்றது.

பஞ்சாப், காஷ்மீர் பிரதேசத்தில் வெகுதூரம் இந்தியாவுக்குள் பாகிஸ்தான் படைகள் ஊடுருவிப் பாய்ந்துள்ளதாக அறிவித்துள்ளன. அதேசமயம் சியால்கோட் பகுதியில் பாகிஸ்தான் நிலைகளை ஊடுருவிக்கொண்டு வெகுதூரம் வரை இந்தியபடைகள் பாகிஸ்தானுக்குள் பாய்ந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். சுமார் 9கிலோமீட்டர் தூரம் இந்திய படைகள் நுழைந்திருக்கிறார்களாம்.

**பா. ராணுவத்துக்கு சவூதி விமானங்கள்**

பாகிஸ்தான் ராணுவத்தில் பயன்படுத்துவதற்காக சவூதி அரேபிய விமானங்கள் அனுப்பத்தொடங்கியிருப்பதாக ஒருசெய்தி கூறுகின்றது.

பேருட்டிலிருந்து வரும் ஒரு செய்தியின்படி சவூதி அரேபியா சண்டை விமானங்கள் பலவற்றை பாகிஸ்தானுக்கு அனுப்பத்தொடங்கியுள்ளதாம். ஆனால் இச் செய்தி ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

**ரன் ஆப் கச் பகுதியில் சண்டை**

ரன் ஆப் கச் பகுதியில் நேற்று பலத்தசண்டை நடைபெற்றது. இங்கு இந்திய போர்ப்படகுகள் பலவற்றைத்தாக்கி சேதமடித்ததாக பாகிஸ்தான் கூறியது. ஆனால் அங்கு ஒரு முக்கிய இடத்தை தம்வசப்படுத்திக் கொண்டதாக இந்தியர் கூறுகிறார்கள். சில காலத்துக்குமுன் உலக நீதிமன்றத் தீர்ப்பொன்றின் படி இந்த இடம் பாகிஸ்தானுடன் சேர்க்கப்பட்டிருந்தது.

சியால்கோட்டில் ஒரு பட்டணம், 4 கிராமங்களை ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும் ஹிசேனி வாலாவில் இரண்டு கிராமங்களைக் கைப்பற்றியதாகவும், இந்தியர் கூறுகிறார்கள் ஜம்முவில் 83 பாகிஸ்தான் டாங்கிகளை துவம்சம் செய்ததாகவும் இந்தியர் தெரிவித்தனர்.

**19 விமானங்களை மட்டும் இழந்தனராம்**

இதுவரை இந்திய விமானப்படையைச் சேர்ந்த 19 விமானங்களைத்தான் சேதமடைந்தனவாம். இப்படி அவர்கள் கூறுகின்றனர். இதுவரை 52 பாகிஸ்தானிய விமானங்களை சுட்டுவீழ்த்திவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் 60க்கும் மேற்பட்ட இந்திய விமானங்களை சுட்டுத்தள்ளியிருப்பதாக பாகிஸ்தான் ... 89 பாகிஸ்தான் ... சேதப்படுத்தியதாக

## கிழக்கில் போர் நிலைமை

கிழக்குப் பாகிஸ்தான் போர்நிலைமைபற்றிய செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே காணப்படுகின்றன. அங்கு பெரும் பகுதி தம்வசம் வந்துவிட்டதாவே இந்திய அதிகாரிகள் தெரிவித்த போதிலும் ஆதிக்கம் தம்வசமே இருப்பதாக பாகிஸ்தான் கூறுகின்றன. 189 தடவைகள் இந்திய விமானங்கள்பறந்து தாக்குதல்களை நடத்தியதாகக் கூறுகிறார்கள். டக்கா பகுதியில் விடுதலைப்படையைச் சேர்ந்த விமானங்கள் இருதடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

சிட்டாகங் துறைமுகத்தில் இரு பாகிஸ்தான் கப்பல்களை இந்தியர் மூழ்கடித்ததாகவும் கூறுகிறார்கள்.

## வங்காளதேச அரசு வரவேற்பு

வங்காளதேச அரசாங்கத்தை இந்திய அங்கீகரித்துள்ளதை முஜிப்நகரில் கூடிய வங்காளதேச அமைச்சர்கள் பாராட்டியுள்ளார்கள். இந்திய அங்கீகாரம் விடுதலைப்படையினருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இதற்காக வங்காளதேச மந்திரிகள் நன்றி தெரிவித்தனர்.

ஐ. நா. பாதுகாப்புசபையில் போலந்தும், சோவியத் யூனியனும் மேற்கொண்ட நிலையையும் வங்காளதேச மந்திரிகள் வரவேற்றுள்ளனர்.

**ஆஸ். பிரதமர் கூற்று**

பாகிஸ்தான் அதிபர்ஜெனரல் யாஹ்யாகானுக்கு கிழக்கு வங்காள நிலைமைபற்றி நான்கு தடவைகள் தாம் கடிதம் எழுதியுள்ளதாகவும் ஆனால் ஒரு கடிதத்திற்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும் ஆஸ்திரேலிய பிரதமமந்திரி திரு. மாக் மோகன் தெரிவித்துள்ளார். இப்படி கடிதம் எழுதிய ஏனைய நாடுகளுக்கு அதிபர் யாஹ்யாகான் இன்று கடூரமான பதில் அனுப்பியுள்ளார். அங்கு பதிலை எழுதாமல் விட்டிருக்கிறார் என்று திரு. மாக் மோகன் தெரிவித்துள்ளார்.

## சோவியத் மீண்டும் சமரச முயற்சி

இந்திய துணைக்கண்டத்தில் அமைதியை ஏற்படுத்தும்வகையில் மீண்டும் ஐ. நா. பந்தோபஸ்துசபையில் சோவியத்யூனியன் தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது

இந்தத் தீர்மானத்தில் இந்திய பாகிஸ்தான் படைவிலகல் பற்றி எதுவும் குறிக்கப்படவில்லையென்று தெரிகின்றது.

என்றாலும் இந்தோ பாகிஸ்தான் தகராறு பற்றிய விஷயத்தை ஐ.நா.வில் ... வும் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மகாசபையில் ... கட்டத்தில் விவாதிக்கவேண்டும் என்று சோவியத் பிரதிநிதி கோரியிருக்கிறார். பொதுச்சபைக்கு வரும் பிரேரணைகளை "வீட்டோ" செய்யும் அதிகாரம் எந்த நாட்டுக்கும் இல்லை.

**கொஸிஜின் திரும்பினார்**

நேற்று மாஸ்கோவில் இந்திய தூதுவர் திரு. செல்வத்வர் சோவியத் துணைப்பிரதமர்களில் ஒருவரான திரு. குஸ்னெக் சோவை சந்தித்துப் பேசினார்.

[5-ம்பக்கம் பார்க்க]


**விதை மிளகாய்**

இனம்: மகா இலுப்பள்ளம சுத்த இனம்
சுத்தம்: 95% முளைத்திறன்: 80%

கிடைக்குமிடம்:-

(1) விதை கமம் (SEED FARM)
116 1/4 கட்டை, கண்டி வீதி, பரந்தன்.

(2) றோஸ் பிரண்ட் தொழிற்சாலை
(ROSE BRAND FACTORY)
உடுவில் றேட், மானிப்பாய்.

விலை 1 றாத்தல் ரூபா 5|50 சதம்

விவசாய இலாக்காவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விதை தயாரிக்கும் கமம். விவசாய இலாக்காவினரும் எங்களிடம் விதைமிளகாய் வாங்குகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் பாக். முன்னேற்றம் தடை

காஷ்மீர் பகுதியில் முன்னேறியிருந்த பாகிஸ்தான் படைகளைத் தடுத்து பின்வாங்கச் செய்துவிட்டதாக இந்திய ராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர். முன்னேறியிருந்த பாகிஸ்தான் படைகளின் 13 தாங்கிகளை சம்பாவூருக்கும் நாராபூருக்குமிடையில் நாசம் செய்துவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர். ராமியா பகுதியில் 5 நகரங்களைப் பிடித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம் பகுதியில் மண்டியாலாவை பாகிஸ்தான் படைகள் கைப்பற்றியுள்ளனர். இந்த நகரைத் திருப்பிப் பிடிப்பதற்கு இந்திய படைகள் பலத்த தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்களாம். இங்கு கடும் சண்டை நடப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜெயசிம்மா விமான நிலையத்தின் மீது நேற்று பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசின. சேதம் பற்றிய விபரம் தெரியவில்லை. இங்கு குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டுகளையும் பாகிஸ்தான் விமானங்கள் வீசியுள்ளன.

ஜயந்திபூரில் சிக்கல் நோக்கி இந்தியப்படைகள் முன்னேறுகின்றன. வட மேற்கில் உமார்கோட் பகுதியை நோக்கி இரு முனைகளில் இந்திய படைகள் முன்னேறுவதாகத் தெரிகிறது. வங்காளக்கடலில் கைப்பற்றப்பட்ட ஆறு வர்த்தகக் கப்பல்களும் இந்தியத்துறைமுகங்களுக்குத் திருப்பப்பட்டுள்ளன.

ஐ. நா. ஊழியர்களை வாபஸ் பெறுவதற்கு ஏற்றிச் செல்வதற்காக டாக்காவுக்குச் சென்ற விமானம் எவ்வாறு சேதமுற்றது என்பதுபற்றி இந்திய அதிகாரிகள் ஆராய்கிறார்கள். ஐ. நா. பொதுச் செயலாளர் கேட்டுக்கொண்டபடி நேற்றிரவு 10 மணியிலிருந்து இன்று பிற்பகல் 1 மணிவரை டாக்கா பகுதியில் நடவடிக்கையில் இறங்கவில்லையென்று இந்தியர் கூறினார்கள்.

கிழக்குப்பாகிஸ்தான் அதிகாரிகளே ஒப்புக்கொண்

[6ம் பக்கம் பார்க்க]

# மேற்கு அரங்கில் வெகுதூரம் ஊடுருவல்

மேற்கு அரங்கில் இந்திய படைகள் சிந்து பகுதியில் சுமார் 80 கிலோ மீட்டர் தூரம்வரை முன்னேறியிருக்கிறார்கள். பிரமபுத்திர நதியின் மேற்குக்கரையை அவர்கள் இப்பொழுது எட்டிவிட்டார்கள் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. சிந்து பகுதியில் ஏழு இடங்களை இந்தியர் கைப்பற்றியுள்ளார்கள். இவைகளில் நான்கு லக்ச்சுபகுதியில் இருக்கின்றன.

தோரோ நாருருக்கு அருகே பாகிஸ்தான் படைகளுக்கு ராணுவப் பொருட்கள் ஏற்றிச் சென்று கொண்டிருந்த ரயில்வண்டி யொன்றை இந்திய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது. அந்த வண்டியின் எஞ்சினும் 14 பெட்டிகளும் நாசமாக்கப்பட்டனவாம்.

[6-ம் பக்கம் பார்க்க]

# அமைதியை ஏற்படுத்த அவுஸ்திரேலியா முயலும்

ஹான்பரா, டிச.7

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள போரை நிறுத்த அவுஸ்திரேலியா முயற்சி செய்யுமென்றும் பாகிஸ்தானே சட்டரீதியான அரசாங்கமென தமது நாடு கருதுவதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் திரு மாக்மோகன் இன்று அவுஸ்திரேலிய ஆகிமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இரு நாடுகளுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முதலில் போர் நிறுத்தம் செய்யப்படுவதோடு இருநாட்டுப் படைகளும் தங்கள் எல்லைகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டும். பாகிஸ்தானே சட்டரீதியான அரசாக அவுஸ்திரேலியா ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே பங்களாதேஷை அங்கீகரிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லையென்றார்.

இதே நேரத்தில் இரு நாடுகளும் அவுஸ்திரேலியாவுக்கு நட்புநாடுகள் என்றும் எந்தக் காரணத்தைக் கொண்டும் இவ்விரு நாடுகளுக்கும் ஆயுத உதவி அளிக்கப்படமாட்டாதென்றும் அவுஸ்திரேலியா இவ்விரு நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நடுநிலைமையையே வகிக்குமென்றும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

## சோவியத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் வெளிநாடு சென்றிருந்த சோவியத் பிரதமமந்திரி திரு. கோஸிஜின் தமது பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு மாஸ்கோ திரும்பியுள்ளார்.

## அகதிகள் திரும்புகின்றனர்?

கிழக்கு வங்காளத்தில் டாக்கா நகர் மீது இந்திய விமானங்கள் தொடர்ந்து குண்டுவீசித் தாக்கிவருவதாகக் கூறுகின்றனர்.

கிழக்கு வங்காளத்தில் பெரும் பகுதியை இந்திய படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ளபடியால் இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகள் சிறு சிறு கூட்டமாகத் திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளார்களாம். மங்களா துறைமுகத்தில் இரண்டு பாகிஸ்தான் கப்பல்களை மூழ்கடித்ததாகவும் இன்னும் இரண்டை சேதப்படுத்தியதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்று உதவிப் பரீட்சைக் கமிஷனர் விளக்குவார்

யாழ்ப்பாணம், புதன்

உதவிப் பரீட்சைக் கமிஷனர் திரு. வே. சதாசிவம் இன்று காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஜி. ஸி. ஈ. பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் கூட்டத்தில் அவர்களின் கடமைகள் பற்றி விளக்கிக் கூறுவார். இன்று காலை யாழ்ப்பாணம் வரும் திரு. சதாசிவம் இன்று மாலையே கொழும்பு திரும்புவார்.

## கடலுக்குச் செல்லாதீர் மீனவருக்கு எச்சரிக்கை

கொழும்பு, செவ்

கரையோரப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. நாட்டின் கரையோரப்பகுதிகளில் புதன்கிழமை பிற்பகல் 2மணிவரை கடும் புயலுடன் கூடிய மழை இருக்குமென்றும் மீனவர்களைக் கடலுக்குச் செல்ல வேண்டாமென்றும் அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## பிரிட்டிஷ் பிரஜைகள்

லண்டன், டிச. 7

இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் பிரிட்டிஷ் பிரஜைகள் பற்றிப் புதன்கிழமை பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலகம் ஆராயவிருக்கிறது. இந்தப் பிரஜைகளின் நிலைமை பற்றியும், அவர்களின் பாதுகாப்புப் பற்றியும் ஆராயப்படும். பாகிஸ்தானில் 2060 பேரும் வங்காள தேசத்தில் 200 பேரும் இந்தியாவில் 12,000 பேரும் இருக்கிறார்களெனச் சொல்லப்படுகிறது.

### மலேஷிய உதவி

ஜெனிவாவிலுள்ள சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுகோளுக்கேற்ப மலேசியாவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் இந்தியப் பாகிஸ்தான் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமுகமாக மருந்தும் உதவிகளையும் தொண்டர்களையும் கொடுத்துதவ முன்வந்துள்ளது.

## கிணற்றுள் சடலங்கள்

திருகோணமலை, செவ்.

சென்றமாத நடுப்பகுதியில் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் பெரியகுளம் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து உப்புவெளி பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்டவர்கள் கூடப்பிறந்த சகோதரர்கள். இவர்களுடைய சடலங்களை தந்தையார் அடையாளம் காட்டினார். இவர்களது மரணம் தொடர்பாக 80 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

## கோரிக்கை

வெள்ளவத்தை, செவ்

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய சேமிப்புவங்கியில் தற்போது தபாற்கந்தோர் சேமிப்புவங்கி, சேமிப்புப் பத்திரங்கள் இவை ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும்படியும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களுக்கு அதிகளவு உயர்வு வழங்கவேண்டும் என்றும் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், தபால் விநியோக சேவா சங்கம் ஆகிய தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. 5-10 வருடங்கள் சேவையிலுள்ளவர்களைத் தேசிய சேமிப்பு வங்கியில் 5வது தரத்தில் நியமிக்கும்படியும் 10 வருடங்களுக்குக் கூடிய சேவையாளர்களை 4வது தரத்தில் நியமிக்கும்படியும் ஏற்கனவே அரசாங்க ஊழியர்கள் அனுபவித்துவரும் புகையிரத வாரண்டுகள், பென்சன் சலுகைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்கவிட வேண்டும் என்றும் ... தேசிய சேமிப்பு ... கோரிக்கையை விடுத்துள்ளன.

## படுகொலை!

கள்ளியங்காடு, செவ்.

திருநெல்வேலி கிழக்கிலுள்ள செங்குந்தா ஒழுங்கையில் கணபதிப்பிள்ளை சோமலிங்கம் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காணித்தகராறே இக்கொலைக்குக் காரணமென இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக சந்தேக நபரான இ.பே.ச. சாரதி பரஞ்சோதி சரவணமுத்துவை பொலிசார் தேடி வருகின்றனர்.

## கோவிலில் தஞ்சம்

கள்ளியங்காடு, செவ்

யாழ்ப்பாணப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த குளப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில் குடிசையில் வசிக்கும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இருக்க இடமின்றி அருகாமையில் உள்ள கோவில் ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

## பொலிசாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம். செவ்.

போயாதினத்தன்று கிளிநொச்சியில் கள்ளுவியாபாரத்தில் சட்டத்துக்குவிரோதமாக ஈடுபட்டிருந்த பலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளனர். இவர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிசார் முன்வந்துள்ளனர்.

## "பிரேம திவான" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

விஜயேந்திரன் எழுதிய 'பிரேமதிவான' என்றவசன காவிய நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 15-ந்தேதி மலியாகத்தில் நடைபெறும்.

## தொலைபேசி தொடர்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நிதிமன்ற உப-தபால் கந்தோரில் நேற்று தந்தி தொலைபேசி சேவைகளை, யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா ஆரம்பித்துவைத்தார்.

தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருடன் இக்கந்தோரிலிருந்து முதலாவது தொலைபேசி தொடர்பு கொண்ட மேயர் இச்சேவைகளை ஏற்படுத்தியதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தார்.

தபால் அத்தியட்சர் திரு. நடராசா, இஞ்ஜினியர் திரு. கந்தசாமியும் சமுகமளித்திருந்தனர்.

## பாகிஸ்தானில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் தலைவர்தான் திரு. நூரின் அமீன்.

பாகிஸ்தான் இந்திய யுத்தம் தொடங்குவதற்கு முன்பு சிவில் அரசு ஒன்றை அமைப்பது பற்றி இவ்விரு தலைவர்களுடனும் ஜனாதிபதி ஜெனரல் யாஹ்யாகான் பேச்சுவார்த்தை நடத்தினாரென்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கில் பாக். முன்னேற்றம்

மேற்குப் பகுதியில் பாகிஸ்தான் இந்திய எல்லையில் மூன்று இடங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும், அந்த வெற்றி பாகிஸ்தானுக்கு முக்கியமான வெற்றியாகும் என வெளிநாட்டுநிருபர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மணிடியாலாவிலுள்ள இந்திய முன்னணிஅரங்கைப் பாகிஸ்தான் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்பதை இந்தியத் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## யு. என். பி. மாநாடு

கோப்பாய், செவ்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாடு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

## அராலிக் கிராமசபை கேள்வி விண்ணப்பம்

1. 1971-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு அராலிக் கிராமசபை அக்கிராசனரால் ஒப்பந்த காரியாலயத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலைகளுக்கு அரக்கு முத்திரை (சீல்) வைக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 18-12-71-ந் திகதி முற்பகல் 11-30 மணிவரையும் கொடுக்கப்படும்

3. ரூபா 25/ டெண்டர்ப் பணம் கட்டுவதன் பேரில் அராலிக் கிராமசபை அக்கிராசனரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் ரூபா 15/ பத்திரப்பணமாக அறவிடப்படும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

5. கேள்விகள் இக்கிராமசபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும் அல்லது காலை 9-00 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமசபைக் கூட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும். கேள்வியைக்கொண்ட இடதுபக்க மேல்மூலையில் "அராலிக் கிராமசபை அலுவலகக் கட்டட வேலைக்கான கேள்வி" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6 கேள்வியின் நகல்பிரதியொன்று காகித உறையிட்டு இடதுபக்க மேல்மூலையில் "அராலிக் கிராமசபை அலுவலகக் கட்டடவேலைக்கான கேள்விநகல்" என்று எழுதப்பட்டு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் நிறைவேற்றும் பொறியியலாளருக்கும் பதிவுத் தபாலில் அதே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்

7. கேள்விகளின் உள்ள மாற்றங்கள், அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. கேள்விக்காரரை முடிவாகத் தெரிவு செய்வதற்குப் பொறுப்பாளிகளாகவுள்ள யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரணம் காட்டாமல் எந்த அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையும், அல்லது கேள்வியின் எந்தப்பகுதியையும் ஏற்கும் உரிமையும் உண்டு.

9. கேள்விக்காரரின் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்பட்ட இருவாரங்களுக்குள் அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கற்பிக்கின்றபடி ஒப்பந்தம் செய்துகொண்டு, வேலையை ஆரம்பிக்கத்தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப் பணமாகிய ரூபா 25-ம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

10. மேலதிக விபரங்கள் யாவும் எமதுசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகளின் பெயர்:

1. அராலிக் கிராமசபை அலுவலகக் கட்டட வேலை,

தலைவர்

இ. நாகலிங்கம்

அராலிக் கிராமசபை

கிராமசபை அலுவலகம்

அராலி.

3-12-1971

2699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மலர்மேல் அமர்ந்ததும் பாட்டை நிறுத்திக் கொள்கின்றன தேனீக்கள். அது போல் பதவியில் அமர்ந்ததும் ஊமையராகின்றனர் தீவிரவாதிகள்.

—தொமஸ்மூர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

புதன்கிழமை விரோதிகிருது வருஷம் கார்த்திகை மாதம் 22-ந் திகதி (8-12-71)

## ஒதுங்கி நில்லுங்கள்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் இப்போது முழு அளவில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருதரப்பிலும் ஆட்சேதமும் பொருட்சேதமும் பெருமளவில் ஏற்படுவதாக யுத்தச் செய்திகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. இந்த யுத்தத்தினால் இருநாடுகளுக்குமே பெருநஷ்டம் ஏற்படுவதுடன் இரு நாடுகளின் முன்னேற்றம் வெகுவாகத் தடைப்படும். யுத்தத் தீ மூண்டுவிட்டது இனி அதை அணைப்பது எப்படி?

'போரை நிறுத்துங்கள் போர் தொடங்குவதற்கு முன்னர் இருந்த நிலைகளுக்கு இருதரப்புப் படைகளும் திரும்பிச் செல்ல உத்தரவிடுங்கள்' என்ற ஐ. நா. பாதுகாப்புச்சபையின் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி விடுவதால் யுத்தத்தை நிறுத்திவிட முடியுமென்றோ இருநாடுகளுக்கிடையிலும் யுத்தம் ஏற்படக் காரணமாகவிருந்த பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிடுமென்றோ எதிர்பார்க்க முடியுமா?

யுத்தம் தொடங்கிவிட்டதால் இந்தியாவுக்கு வழங்கிவந்த ஆயுத உதவியையும் அமெரிக்கா நிறுத்திவிட்டதாலும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் வெளிவல்லரசுகள் வழங்கிவரும் ஆயுத பொருளாதார உதவிகளை நிறுத்திவிடுவதாலும் இந்திய உபகண்டத்தில் யுத்தம் நின்று அதன் பிரச்னைகளை நீங்கிவிடுமென எதிர்பார்க்கலாமா?

மேற்கு ஆசியாவில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் யுத்தம் ஏற்பட்டபோது வெளிவல்லரசுகள் தங்கள் உதவிகளை நிறுத்திக் கொண்டன. பின்னர் யுத்தம் நின்றதும் சமபலத்தை ஏற்படுத்துவதாகச் சொல்லி அமெரிக்கா இஸ்ரேலுக்கும் சோவியத் யூனியன் ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் ஆயுதங்கள் வழங்கின.

சீனாவிலிருந்து கம்யூனிஸ ஆபத்து பரவாமல் தடுப்பதற்காக ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா தென்கிழக்காசியப் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் என்ற 'சீட்டோ' கூட்டமைப்பிலும் 'மெட்டோ' 'சென்டோ' என்ற இரண்டு கூட்டமைப்புக்களிலும் பாகிஸ்தானைச் சேர்த்து வைத்துக் கொண்டு ஆயுத உதவி அளித்து வந்தது. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் எல்லைப்பிரச்னை தோன்றி யுத்தம் ஏற்பட்டபோது இந்தியாவுக்கு ஆயுத உதவி அளித்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற முன்வந்தது. வியட்நாமில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்கர்களைப் பலிகொடுத்து வருகிறது.

எந்த நாட்டில் எந்த இடத்திலும் அங்குள்ள மக்கள் பிற்போக்குவாத அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினாலும் அப்போராட்டத்துக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதே சீனாவின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் சீனா அதை ஆதரிக்கவில்லை.

பாகிஸ்தானுக்கு சீனாவின் உதவியும் ஆதரவும் இருப்பதாலும் சீனாவுடன் அமெரிக்கா 'பிங்பொங்' ராஜதந்திரத்தில் ஆரம்பித்து இன்று இந்திய-பாகிஸ்தான் யுத்தத்துடன் அதிக தோழமை கொண்டிருப்பதாலும் இந்தியாபக்கம் சோவியத் யூனியன் நிற்கிறது.

இரண்டு உலக மகாயுத்தங்களும் ஐரோப்பாவில் நிகழ்ந்தன. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே சிறு சிறு பிரச்னைகள் தோன்றினாலும் ஒரு பெரிய யுத்தம் ஏற்படக்கூடிய நெருக்கடியான கட்டம் இப்போது இல்லை.

இந்திய-பாகிஸ்தான் யுத்தம் வல்லரசுகளின் தூண்டுதல் காரணமாக மூன்றாவது உலகயுத்தமாகவும் உருவாகக்கூடிய ஆபத்து இருக்கிறது.

சிறிய நாடுகளுக்கிடையில் யுத்தம் ஏற்படுவது வல்லரசுகளுக்கு ஆயுதவிற்பனை காரணமாக ஆதாயம் கிடைக்கும். யுத்தம் வல்லரசுகளுக்கு வியாபார ரீதியில் லாபம். இது தவிர இந்திய உபகண்டம் வளர்ச்சி பெற்றால் வல்லரசுகளுக்குப் பல விதத்திலும் நஷ்டம்.

எனவே இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையிட்டு இருதரப்பும் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வது வல்லரசுகளுக்கு வேடிக்கையாக இருக்கலாம்.

இந்த யுத்தத்துக்கு அடிப்படைக் காரணத்தை இந்த நேரத்திலாவது ஐ. நா. பாதுகாப்புச் சபை ஆராய்ந்து அதற்கு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவதுடன் வல்லரசுகளும் யுத்தத்துக்குத் தூபம் போடாமல் சற்றே ஒதுங்கி நின்று உதவி செய்தால் யுத்த நிறுத்தம் ஏற்பட வழிபிறக்கும் என்று நம்பலாம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 3 இடங்களில் கூட்டுறவு தவறணை; மந்திரிசபை பரிசீலனை செய்யும்

## தூதுகோஷ்டியிடம் தபால் மந்திரி உறுதி

சங்கானை, செவ்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக கூட்டுறவு தவறணைகளை நடாத்திப் பார்க்கவும். ஏனைய இடங்களில் வழமைபோல் சில திருத்தங்களுடன் அமுல் நடத்துவது சாத்தியமா என்பது பற்றியும் மந்திரி சபையின் பரிசீலனைக்கு விடுவதாக தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தம்மைச் சந்தித்த வட இலங்கை சீவல்தொழிலாளர் சங்க தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

இதற்கு முன்னோடியாக வடபகுதியிலுள்ள சகல சீவல் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் ஏகோபித்த மகஜரொன்றை அரசிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் அமைச்சர் அத்தூதுக்கோஷ்டியிடம் தெரிவித்தார்.

இத் தூதுகோஷ்டியில் நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா, திரு. மு. நடேசு, திரு. இ. நடேசன் ஆகியோர் இடம்பெற்றனர்.

அமைச்சர் அலுவலகத்தில் நடந்த சந்திப்பின்போது தூதுகோஷ்டியினர் சமர்ப்பித்த கோரிக்கைகளை பரிசீலனை செய்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் அரசாங்கத்தின் கருத்துப்பற்றித் தெரிவித்த ஐந்து திட்டங்களாவன:

0 நடைமுறையிலிருக்கும் மரபுமுறையினால் அரசாங்கத்திற்கு வரவிலும் பார்க்க செலவு அதிகம்,

0 சீவல்தொழிலாளரைக் கூலிக்கு அமர்த்தி முதலாளிகள் கொள்ளைலாபம் சம்பாதித்தல்.

0 தொழிலாளர் தாங்களே சீவும் கள்ளினைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய அனுமதிப்பதன் மூலம் அதிகாரிகள் தலையீடின்றிச் சுதந்திரமாகச் செயற்படல்.

0 சீவல்தொழில் புரிவோருக்கு வசதியான காலத்தில் சேமலாபநிதி வழங்கல்.

0 கள்ளினை பாதுகாப்பான முறையில் போத்தலில் அடைத்து விற்பனை செய்வதன் மூலம் மேற்படி தொழிலை விருத்திசெய்து தொழிலாளர் அதிக லாபம் பெற வழிவகுத்தல்.

ஆண்பனை ஒன்றிற்கு ரூபா 5/-ம் தென்னை ஒன்றிற்கு ரூபா 15/- வீதமும் வரியை உயர்த்தி வருவாயை அதிகரிக்கலாம் என்றும் விண்ணப்பப் பத்திரத்திலுள்ள 3-ம் 4-ம் கூடுகளிலுள்ள சில நிபந்தனைகளைத் திருத்துவதன் மூலம் தொழிலாளர் சுதந்திரமாக கடமையாற்ற முடிவதுடன் அரசிற்கு அதிக லாபம் கிடைக்கும் எனவும் தூதுக்குழுவினர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

### காஷ்மீரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக பி.பி.ஸி. செய்தி கூறுகின்றது.

மகாசபை

இந்தியத்துணைக் கண்டத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐ. நா. மகாசபை விவாதத்துக்கு அனுப்புவதென்று பாதுகாப்புச்சபை முடிவுசெய்துள்ளது.

### மேற்கு அரங்கில்—

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

கிழக்கு வங்காளத்துக்கு சாமான் ஏற்றிக்கொண்டு வந்திருந்த டச்சுக் கப்பல் ஒன்றிலிருந்த பொருட்கள் சென்னைத் துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளன. இந்தச் சாமான்களை இறக்கிய பின்னரே டச்சுக்கப்பல் போவதற்கு அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

**வில்சன்கண்டனம்**

போரை விஸ்தரிக்க இந்தியா நடவடிக்கை எடுத்திருப்பதாக அமெரிக்கா கூறுவது மதியீனமான குற்றச்சாட்டு என பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு வில்சன் கண்டித்திருக்கிறார்.

வங்காள தேசத்தை இந்தியா அங்கீகரித்திருப்பது சரியான முடிவு என்று பிரிட்டிஷ் ஏடான டெய்லி டெலிகிராப் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

### மக்கள் கமிட்டி தலைவர்

மன்னார், செவ்.

மன்னார் பனங்கட்டிக் கொட்டு வட்டார மக்கள் கமிட்டித் தலைவராக சமாதான நீதவானும் ஹோமியோபதி ஆயுர்வேத வைத்தியருமான திரு. எஸ். ஜோன்மாக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் முன்னாள் வங்காலைக் கிராம சபைத் தலைவரும் மன்னார்ப் பகுதியில் சமூகசேவையாளருமாவார்.

## சுங்க ஏல விற்பனை

கீழே குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் கீழே இருக்கும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும், இடங்களிலும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். ஆகக்கூடிய கேள்வித்தொகையின் 25 சதவிகிதம் கேள்வி முடிவில் கேட்பவரால் கட்டப்படல் வேண்டும்.

1954 வைகாசி மாதம் 28-ந்திகதி அரசாங்க வர்த்தமானியில் (பகுதி i பிரிவு ii)ல் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கமைய ஏல விற்பனை நடைபெறும்;

1954 வைகாசி மாதம் 28-ந்திகதி அரசாங்க வர்த்தமானியில்(பகுதி i பிரிவு ii)ல் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுடன் கீழ்க்காணும் நிபந்தனைகளும் புடவைகள் விற்பனை விடயத்தில் அனுசரிக்கப்படும்.

1. ஒரு தனிப்பட்ட நபர் இரு புடவைகள் மாத்திரம் வாங்கமுடியும். இந்நிபந்தனை அவசியம் ஏற்பட்டால் தளர்த்தப்படும்;

2. பொருட்களை வாங்குவோர் சுங்க அதிகாரியின் திருப்தித்தமைய தம்மை அடையாளம் செய்யவேண்டும். பின்வரும் பத்திரங்கள் அடையாளம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) வாகனமோட்டும் அனுமதிப்பத்திரம் அல்லது
(ii) பிரதம தபால் அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாளஅட்டை அல்லது
(iii) மாணவ அடையாளப் பத்திரம் அல்லது
(iv) பிறநாடுகளுக்குச் செல்லும் அடையாளப்பத்திரம் அல்லது வேறு ஏதாவது அடையாளப்பத்திரம்.

### பட்டியல்

| பொருட்கள் | விற்பனைத் தினம் | விற்பனைசெய்யும் இடம் | விற்பனை நேரம் |
|---|---|---|---|
| (1) படுக்கைவிரிப்புகள், சட்டைத்துணிகள், சாரங்கள், பாவாடைத் துணிகள், பருத்திச் சேலைகள், பட்டுச் சேலைகள், பருத்தி வேட்டிகள், செயற்கை பட்டுச்சாரங்கள் (சொந்தர் சபையினால் நிராகரிக்கப்பட்டவை) | 1971-ம் ஆண்டு மார்கழி மாதம், 18-ம், 19-ம், 29-ம், 30-ம் திகதிகள் | யாழ்ப்பாண சுங்க இலாகா | காலை 9-30 தொடக்கம் பின்னேரம் 3 மணி மட்டும் |
| (2) சாதிக்காய், பாக்குகள், கராம்பு நெட்டிகள், ஜாதிப்பத்திரி, சக்கரின், 2 மோட்டார்கள், (அவுட்போர்ட்) நைலோன் வலைகள், விளக்குத்திரிகள். | 1971-12-21 | யாழ்ப்பாண சுங்க இலாகா | காலை 9-30 தொடக்கம் பின்னேரம் 3 மணி மட்டும். |
| (3) 3 பர்லின்ஸ்சிலிண்டர்கள் பூட்டிய இயந்திரவள்ளம் நம்பர் N K 750. | 1971-12-24 | ஊர்காவற்றுறை சுங்க இலாகா | காலை 9-30 தொடக்கம் பின்னேரம் 3 மணி மட்டும். |

எஸ். எம். ஜே. சேனரத்ன
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக

2695

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org